

# ஹர ஹர சங்கரா

FREE COPY August - 2026 Vol. 5 - ISSUE 10





உன்னையல்லால் வேறே கதியில்லை குருவே
உலகெல்லாம் ஆளும் ஈசன்

# KODAMBAKKAM TIMES



# SHARADHA STORES



Since 1974

# சாரதா ஸ்டோர்

## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி



- வெண்ணெய் கைமுறுக்கு
- வெல்லம் சீடை
- உப்பு சீடை
- தட்டை
- அப்பம்
- ரவா லாடு
- மா லாடு
- திரட்டி பால்
- அவல் / அச்சுவெல்லம்
- Original ஊத்துக்குளி வெண்ணெய்
- சாப்பாட்டு நெய்
- கிருஷ்ணர் பாதம்
- மனோகரா உருண்டை
- அதிரசம்
- வேர்க்கடலை உருண்டை

அனைவருக்கும்...
இனிய
கிருஷ்ண ஜெயந்தி
நல்வாழ்த்துக்கள்.....

**HEAD OFFICE : 51, Arya Gowda Road, West Mambalam, Chennai - 600 033.**

**TWO BRANCH OFFICES :**

**15/5, Gandhi Street, Alwarthirunagar, Chennai - 600 087.**

**Plot No.39, Chinthamani Vinayagar Koil Street, (Opp). Periyar Park, Ramakrishna Nagar, Valasaravakkam, Chennai - 600 087.**

**West Mambalam** / **West Mambalam**

**98402 88824 / 98408 53429**

**Alwarthirunagar**

**98841 53428**

# KRISHNA DELISH COFFEE






## எங்களிடம் தரமான காபி கொட்டை அரைத்து தரப்படும்

கிருஷ்ண ஜெயந்தி நல்வாழ்த்துக்கள்

## 1 கிலோ காபி பவுடர்

## ரூ 920 மட்டுமே

* Condition Apply

---

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS.25 only

**COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE**

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181

# ஸ்ரீசக்கரத்தின் மகிமை

எந்திரங்களில் உயர்ந்தது ஸ்ரீசக்கரம் என்பது ஆன்றோர் வாக்கு.

ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீசக்கரம், மனித குலத்துக்கு சங்கரரின் அருள்கொடை. காஞ்சி காமாட்சியம்மன் கோயில், திருவானைக்காவல், திருவொற்றியூர் போன்ற எண்ணற்ற தலங்களில் இந்த ஸ்ரீசக்கரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மனிதர்களின் துயர்களை நீக்கி அவர்களுக்கு அன்னையின் பரிபூரண அருளினை அளிக்கும் உபாயமே ஸ்ரீசக்கரம். உலகை ரட்சிக்கும் நாயகியான ராஜராஜேஸ்வரி மகாமேருவில் உறைபவள். மகாமேருவின் உருவையே ஸ்ரீசக்கரத்தில் பொறிக்கிறார்கள். மகாசக்தியை மந்திரம், எந்திரம், தந்திரத்தால் வழிபடுவர். இம்மூன்றும் முக்கோணத்தின் மூன்று மூலைகள். அன்னையின் அருளைப் பெற ஸ்ரீசக்கர வழிபாடே சிறந்தது என்கிறது தேவி புராணம்.

மூன்றின் பலம்

முக்காலங்கள், மும்மூர்த்திகள் அனைத்தும் அன்னையின் அமைப்புகளே. இதன் பொருட்டே திரிபுரசுந்தரியை மகாமேரு என்னும் மந்திரம், எந்திரம், தந்திரத்தால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீசக்கரத்தின் மூலம் வழிபடுகின்றனர். அனைத்து விதமான சக்கரங்களுக்கும் தலையாயது இந்த ஸ்ரீசக்கரம். அதன்பொருட்டே ஸ்ரீசக்கரத்தினை "ஸ்ரீசக்கர ராஜா" என்றே ஆன்மீகத்தில் சிறந்த மகான்கள் குறிப்பிடுவர். ஒன்பது நிலைகளைக் கொண்ட ஸ்ரீசக்கரத்தினைப் பூஜிக்கும் முறை நவாவரணம் என அழைக்கப்படும். தேவி கட்கமாலா கூறும் நவாவரணம் - சிறு விளக்கம்.

முதல் நவாவரண ஆவரணம்

இந்த ஆவரணத்தின் கிரகமாக வியாழ பகவான் விளங்குகிறார். முதல் ஆவரணத்தை வணங்குபவர்களுக்கு எல்லா செல்வங்களும் நிலைக்கும், தடைகள் நீங்கும், புத்தி பலம் கூடும்.

முதல் நவாவரணத்தின் முதல் ரேகை

இது பூபுரம் எனப்படும் ஸ்ரீ லலிதா மகாதிரிபுரசுந்தரியின் நகரத்தின் (ஸ்ரீ புரம் என்பது தேவியின் சாம்ராஜ்யம்) துவக்கம். நான்கு வாயில்களுடன் கூடியது, இதில்

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

KODAMBAKKAM TIMES

MAMBALAM & T NAGAR EDITION

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

K K NAGAR & VADAPALANI EDITION

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

044 2484 4114 / 93826 82128 / 89390 70034

E-mail : kodambakkamtimes@yahoo.com

# கிரகங்களின் கோட்சார நகர்வு காலம் மற்றும் தசா காலம் ஒப்பீட்டு அட்டவணை

| கிரகம் | ஒரு இராசியில் கோட்சார காலம் (சராசரி) | 12 இராசிகளையும் சுற்றும் காலம் | விம்ஷோத்தரி தசா காலம் |
|---|---|---|---|
| சூரியன் | 1 மாதம் | 1 ஆண்டு | 6 ஆண்டுகள் |
| சந்திரன் | 2¼ நாட்கள் | 27.3 நாட்கள் | 10 ஆண்டுகள் |
| செவ்வாய் | 45 நாட்கள் – 2 மாதங்கள் | சுமார் 2 ஆண்டுகள் | 7 ஆண்டுகள் |
| ராகு | 18 மாதங்கள் (பின்வக்கிரம்) | 18 ஆண்டுகள் | 18 ஆண்டுகள் |
| குரு | 1 ஆண்டு | 12 ஆண்டுகள் | 16 ஆண்டுகள் |
| சனி | 2½ ஆண்டுகள் | 30 ஆண்டுகள் | 19 ஆண்டுகள் |
| புதன் | 20–30 நாட்கள் (மாறுபடும்) | சுமார் 1 ஆண்டு | 17 ஆண்டுகள் |
| கேது | 18 மாதங்கள் (பின்வக்கிரம்) | 18 ஆண்டுகள் | 7 ஆண்டுகள் |
| சுக்கிரன் | 23–30 நாட்கள் (மாறுபடும்) | சுமார் 1 ஆண்டு | 20 ஆண்டுகள் |

### விம்ஷோத்தரி தசா கால வரிசை

| வரிசை | கிரகம் | தசா காலம் |
|---|---|---|
| 1 | கேது | 7 ஆண்டுகள் |
| 2 | சுக்கிரன் | 20 ஆண்டுகள் |
| 3 | சூரியன் | 6 ஆண்டுகள் |
| 4 | சந்திரன் | 10 ஆண்டுகள் |
| 5 | செவ்வாய் | 7 ஆண்டுகள் |
| 6 | ராகு | 18 ஆண்டுகள் |
| 7 | குரு | 16 ஆண்டுகள் |
| 8 | சனி | 19 ஆண்டுகள் |
| 9 | புதன் | 17 ஆண்டுகள் |

**மொத்த விம்ஷோத்தரி தசா சுழற்சி = 120 ஆண்டுகள்**

### ஜோதிட ரீதியாக நினைவில் கொள்ள வேண்டியது

**கோட்சாரம் =** தற்போதைய கிரக இயக்கத்தால் ஏற்படும் நிகழ்வுகள்.

**தசா =** வாழ்க்கையில் அந்த கிரகம் வழங்கும் முக்கிய கர்ம பலன்களின் காலம்.

தசா என்பது **'விதை'** என்றால், கோட்சாரம் என்பது **'அதை முளைக்கச் செய்யும் பருவநிலை'** போன்றது.

**நல்ல தசாவில்** சாதாரண கோட்சாரமும் பலன் தரும்; **கெட்ட தசாவில்** சிறந்த கோட்சாரமும் முழுப் பலன் தராது என்று பாரம்பரிய ஜோதிடம் கருதுகிறது.

மூன்று ரேகைகள் உண்டு, இதன் தேவி திரிபுராபகவதி.

இரண்டாவது ஆவரணம்

பதினாறு யோகினிகள் வாசம் செய்யும் தாமரைப் பூ ரூபம் இது. மனதின் தீய எண்ணங்கள் நீங்கும், அகம் தூய்மையாகும், வெண்மை நிறைமுடைய இதில் பதினாறு ஆகர்ஷன சக்திகள் உண்டு.

மூன்றாவது ஆவரணம்

பூஜிப்பவரின் மனதை ஒருமுகப்படுத்தும் தேவதைகள் எட்டு தாமரை இதழ்களில் வாசம் செய்வதாக ஐதீகம். இவர்கள் பக்தியின் மேன்மையை பக்தர்களுக்கு அளிப்பவர்கள். இதன் தேவி திரிபுரசுந்தரி, செம்பருத்தி பூ போன்ற நிறம், சிவபெருமானைத் தத்துவமாகக் கொண்டது, எட்டு தாமரை இதழ்களால் ஆனது, எட்டு தேவதைகளை கொண்ட சக்கரம், பக்தனின் அச்சத்தை நீக்கி பாதுகாப்பை அளிக்கும் தேவதைகள்.

இந்த எண்மரும் மிகவும் உக்கிரமான தேவதைகள். ஸ்ரீசக்கரத்தை

# வரவிருக்கும் முக்கிய பண்டிகைகளின் விவரம்

**ஆகஸ்ட்**

03/08/26 திங்கள் : ஆடிப் பெருக்கு
21/08/26 வெள்ளி : வரலட்சுமி விரதம்
26/08/26 புதன் : ருக் உபாகர்மா
27/08/26 வியாழன் : யஜுர் உபாகர்மா
28/08/26 வெள்ளி : காயத்ரி ஜபம்
வரலஷ்மி விரதம்

**செப்டம்பர்**

04/09/26 வெள்ளி : ஜன்மாஷ்டமி
13/09/26 ஞாயிறு : ஸாம உபாகர்மா
14/09/26 திங்கள் : விநாயக சதுர்த்தி
27/09/26 ஞாயிறு : மஹாளய பக்ஷம்

**அக்டோபர்**

10/10/26 சனி : மஹாளய அமாவாசை
11/10/26 ஞாயிறு : நவராத்திரி ஆரம்பம்
19/10/26 திங்கள் : சரஸ்வதி பூஜை
20/10/26 செவ்வாய் : விஜயதசமி

**நவம்பர்**

08/11/26 ஞாயிறு : தீபாவளி
10/11/26 செவ்வாய் : சஷ்டி விரதம்
15/11/26 ஞாயிறு : கந்த சஷ்டி
24/11/26 செவ்வாய் : சர்வாலய தீபம்

**டிசம்பர்**

20/12/26 ஞாயிறு : வைகுண்ட ஏகாதசி
24/12/26 வியாழன் : ஆருத்ரா தர்சனம்

---

பூஜிப்பவர்களுக்கும், வழிபடுபவர்களுக்கும் அவர்களின் எதிரிகளை அடக்கி தேவையெனில் அழித்து பக்தர்களை காப்பாற்றுவார்கள்.

நான்காவது ஆவரணம்

இந்த ஆவரணத்தில் 14 யோகினிகள் வாசம் செய்கின்றனர். சந்திரன் வடிவில் அன்னை காட்சி தருவாள். புத்திர பாக்கியத்தை அளிக்கும் ஆவரணம் இது. பரமாத்மா பதினான்கு புவனங்களிலும் நிறைந்திருப்பதை விளக்கும் வகையில் பதினான்கு முக்கோணங்களை கொண்டு சக்கரம் இது மாதுளம் பூ நிறமுடையது. இந்த ஆவரணத்தின் தலைவி திரிபுரவாஸினி.

ஐந்தாவது ஆவரணம்

பத்து கோணங்களில் பத்து யோகினிகள் வாசம் செய்கின்றனர். உடல் ஆரோக்கியம், மன ஆரோக்கியம் தரும் திரிபுராஸ்ரீ என்னும் அம்பிகையை தலைவியாக கொண்ட இந்த சக்கரம் பத்து முக்கோணங்களை கொண்டது. குருவை இறையுருவாக வழிபடுதல் இந்த சக்கரத்தின் சிறப்பு.

ஆறாவது ஆவரணம்

அன்னை சூரியனின் உருவில் இருக்கும் ஆவரணம் இது. பொறாமை இருளை அகற்றி அருளின் ஒளியை ஏற்ற உதவும். வழிபடுவோரின் ஜீவனை பாதுகாக்கும் சக்கரம். இதில் பத்து கோணங்கள், செம்பருத்தி பூ நிறம். இதன் தலைவி திரிபுரமாலினி.



ஏழாவது ஆவரணம்

புதன் கிரகம் அமையப்பெற்ற ஆவரணம். இந்த ஆவரணத்தை பூஜிப்பதின் மூலம் ஆத்ம ஞானம் பெருகும். ரோகம் என்பது வியாதி, ஹரம் என்பது நீக்குதல். அஞ்ஞானம் என்பதே எல்லா ரோகங்களுக்கும் காரணம். இந்த சக்கரத்தின் தேவி திரிபுராசித்தா. சிவப்பு நிற மலர்களால் அர்ச்சிக்கப்படுகிறாள். எட்டு முக்கோணங்களை கொண்டது இந்த ஆவரணம். இந்த சக்கரத்தை வழிபடும்போது அறியாமை மட்டுமின்றி உடல் ரீதியான வியாதிகளும் நீங்கும்.

எட்டாவது ஆவரணம்

மகா திரிபுரசுந்தரியாக அன்னை வீற்றிருக்கும் ஆவரணம் இது. அங்குசம், பாசம், கரும்பு வில் மற்றும் பாணம் ஆகிய அம்பாளின் நான்கு ஆயுதங்கள் இந்த ஆவரணத்தில் வழிபடப்படுகின்றன. சர்வ சத்தி என்பது ஜீவாத்மாவையும், பரமாத்மாவையும் குறிக்கும். இது மூன்று கோணங்களை உடையது. பாசம், அங்குசம், பாணம், கரும்புவில் ஆகிய ஆயுதங்களின் மண்டலங்கள் இவற்றில் உள்ளது. இந்த யந்திரம் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி வடிவமானது. அக்னி, சூரிய, சந்திர வடிவமான இந்த ஆவரணத்தின் தலைவி திரிபுராம்பா.

ஒன்பதாவது ஆவரணம்


பேரின்பத்தை நிலைபெறச் செய்யும் ஆவரணம் இது. அர்த்தநாரீஸ்வரர் வீற்றிருக்கும் இந்த ஆவரணத்தைப் பூஜிப்பதின் மூலம் சகல நன்மைகளும் ஏற்படும். முழுநிறைவான ஆனந்தமயமான நிலையில் சிவனோடு இணைந்து அன்னை தம்பதிசமேதராக அருள் பாலிக்கும் இடம். ஸ்ரீ வித்யை, ஸ்ரீ சக்கர வழிபாடு, சாக்த மரபு என்பது சிலர் கருத்து. சாக்தம் என்பது அம்பாளை மட்டுமே வழிபாடு செய்வது. ஆனால் சிவனையும், சக்தியையும் இணைத்து சிவசக்தி ஐக்கிய ரூபமாக வழிபடுதலே ஸ்ரீ வித்யையின் சிறப்பு. சிவமின்றி சக்தி இயங்காது. சக்தி இன்றி சிவமும் அசையாது.

இதர எட்டு ஆவரணங்களையும் பூஜித்து படிப்படியாக ஒன்பதாவது ஆவரண பூஜையின் போது உபாசகன் தான் பரபிரம்மத்தின் அங்கம், தன்னுள் இறைவன் நிறைந்திருக்கிறான் என்ற உணர்வை அடைகிறான்.

இந்த ஸ்ரீசக்கரத்தில் வீற்றிருந்த அன்னையே ஸ்ரீமகாதிரிபுரசுந்தரி. ஸ்ரீ ராஜராஜேஸ்வரியும் இந்த அன்னையே. ஒன்பதாவது ஆவரணத்தில் வீற்றிருக்கும் அன்னைக்கு காமேஸ்வரி என்றும், சிவனுக்கு காமேஸ்வரன் என்றும் திருநாமம். இந்த சிவசக்தி ஐக்கிய நிலையே இந்து மதத்தில் வழிபாடு செய்யப்படும் அனைத்து தெய்வங்களுக்கும், முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும், ஈரேழு லோகம், உயிர்கள் அனைத்திற்கும் மூலம்.

# நாமசங்கீர்த்தனத்தின் மகிமை

பக்கத்துல ஒரு ஊர்ல பள்ளிக்கூட வாத்யார் ஒருத்தர் இருந்தார் அவர் மகாபெரியவாளோட மானசீக பக்தர். அவரோட ஒய்ஃபுக்கும் பெரியவா தான் எல்லாமும். மகாபெரியவாளோட பேரைச் சொல்லாம அவருக்கு ஒரு நாளும் விடியாது. பெரியவா பெயரைச் சொல்லாமல் இருக்கவும் முடியாது. அவாளுக்கு மனசுக்குள்ளே ஒரு ஏக்கம் இருந்தது. "மகாபெரியவாளை நேர்ல தரிசிக்கப் போகணும்"ங்கறதுதான் அது. இந்தக் காலம் மாதிரி போக்குவரத்து வசதியெல்லாம் அப்போ கிடையாது. அதனால் பள்ளிக்கூடத்துக்கு லீவெல்லாம் எடுத்துண்டு போயிட்டு வரமுடியாத சூழல்.



இப்படியே நாள், வாரம், மாசம், வருஷம்னு காலம் ஓடிண்டு இருந்த நிலையில் ஒரு நாள் அந்த பக்தரோட ஆத்துக்காரிக்கு ஒரு கனவு வந்தது. அதுல சாட்சாத் மகாபெரியவா வந்தார். "என்னைப் பார்க்கணும்னு சதா ஏங்கிண்டு இருக்காதே. பகவானோட நாம சங்கீர்த்தனத்தைப் பாடிண்டு இரு. உங்க அகத்துல பூஜை பண்ண நானே வருவேன். மகான் சொன்னதைக் கேட்டதும் அப்படியே சிலிர்ப்போட எழுந்தா அந்தப் பெண்மணி. பக்கத்துல இருந்த ஆத்துக்காரரை எழுப்பி விஷயத்தைச் சொன்னா. அவருக்கும் தேகம் சிலிர்த்தது. கண்ணுலேர்ந்து ஆனந்த கண்ணீர் பெருகி வழிஞ்சது.

விடியகாலம்பற நேரம் கண்ட கனவு பலிக்கும்னு சொல்லுவா. அதனால நம்பு அகத்துக்கு கண்டிப்பா மகாபெரியவா வருவார்னு நம்பிக்கையோட மகானோட வாக்குப்படி பகவானோட நாம சங்கீர்த்தனத்தைப் பண்ணிண்டே இருந்தா. நாட்கள் நகர்ந்தது. ஆனா, அவாளோட நம்பிக்கை மட்டும் வாடாமத் துளிர்த்தது.

ஒரு நாள் மத்தியான நேரம் அந்த பக்தரோட வீட்டு வாசலில் ரெண்டு பேர் வந்து நின்னா அந்தப் பகுதிக்குப் புதுசா இருந்த அவா மகா ஆசாரமானவாங்கறது தெரிஞ்சுது.

யார் அவான்னு பலரும் யோசிச்சுண்டு இருக்கறச்சே சுத்துமுத்தும் திரும்பித், திரும்பிப் பார்த்த அவர் சட்டுன்னு அந்த பக்தரோட அகத்துக்குள்ளே நுழைஞ்சார். அந்த பக்தரோட பேரைச் சொல்லி அவரைப் பார்க்கத்தான் வந்திருக்கறதாகச் சொன்னார்.

SREE MANGALAGURU JOTHIDA NILAYAM
'VAAZHVIL VELICHAM'
SURESH MADHAVAN
93609 45818
(With Appointment Whatsup Only)

"நாங்க ஸ்ரீமடம் முகாம்லேர்ந்து வரோம், மகாபெரியவா திருப்பதியில் இருந்து மெட்ராஸுக்கு யாத்திரை பண்ணிண்டு இருக்கார். வழியில பல இடங்கள்ள தங்கி பூஜை பண்ணிட்டு யாத்திரையைத் தொடர்ந்துகொண்டு இருக்கார். அந்த வகையில் மகாபெரியவா நாளை மறுநாள் இந்தப் பக்கமா வர இருக்கிறார். அவர் ரெண்டு நாள் இங்கே தங்கறதா தீர்மானம். உங்க அகத்துல அவருக்கு தங்கிக்க வசதி பண்ணலாம்னு கேட்கத்தான் ....." வந்தவா சொல்லி முடிக்கறதுக்குள்ளேயே அப்படியே சந்தோஷத்துல சகலத்தையும் மறந்துட்டா அந்த பக்தர் தம்பதி. "பெரியவாளோட திருவடி எங்க அகத்துல படறதுன்னா, அதுக்கு நாங்க எத்தனையோ பிறவிகள்ல புண்ணியம் பண்ணியிருக்கணும். இதோ இந்த க்ஷணமே எங்க அகத்தை உங்ககிட்டே ஒப்படைச்சுடறோம்"னு தழுதழுப்பா சொன்னா.

மகாபெரியவா அங்கே வரப்போறதும், ரெண்டு நாள் தங்கப்போறதும் ஊர்க்காரா எல்லாருக்கும் தெரிஞ்சது. ஆளாளுக்குப் போட்டி, போட்டுண்டு தெருவை, ஊரை சுத்தப்படுத்தி, தோரணமெல்லாம் கட்டி, வாசல் தெளித்து கோலம்போட்டு, அமர்க்களமா ஏற்பாடுகளைப் பண்ணினா. பழம், காய்கறிகள், தானியங்கள் இப்படி அவசியமான திரவியங்களைப் பலர் கொடுத்தா, பூ, இலைன்னு பூஜைக்குத் தேவையானதுக்கொல்லாம் சிலர் ஏற்பாடு செஞ்சா.

மகாபெரியவா அந்த ஊருக்கு வந்தப்போ ஏராளமானபேர் திரண்டு வந்து பூர்ணகும்ப மரியாதை குடுத்து வரவேற்றா.

எல்லாருக்கும் ஆசிர்வாதம் பண்ணிண்டே அந்த பக்தரோட அகத்துக்குள்ளே எழுந்தருளின மகாபெரியவா அவாளைப் பார்த்து "என்ன சொப்பனம் மாதிரி இருக்கா?" அப்படின்னு கேட்டதும் அப்படியே தடால்னு அவர் திருவடியில விழுந்து நமஸ்காரம் பண்ணிண்டா ரெண்டுபேரும்.

பகவானோட நாமசங்கீர்த்தனத்தைச் சொன்னா கலியுகத்துல கைமேல நற்பலன் கிடைக்கும்கறதுக்கு அந்த பகவானோட அம்சமா விளங்கின மகாபெரியவா நடத்தின திருவிளையாடல்னே இதைச் சொல்லலாம் இல்லையா.

# பகவதி சேவை

கேரளாவில் மிகவும் பிரசித்தி பெற்ற பகவதி சேவை என்பது அன்னை ராஜராஜேஸ்வரிக்கு (பகவதி) செய்யப்படும் மிக சக்திவாய்ந்த ஆன்மீக வழிபாடாகும். ஆடி மாதத்தில் (கர்க்கடக மாதம்) இந்த வழிபாடு நடத்தப்படுகிறது. இந்த பூஜையின் முக்கிய சிறப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வழிபாட்டு முறைகள் :

இந்த பூஜை பொதுவாக ஆடி மாதத்தின் வெள்ளிக்கிழமைகளில் செய்யப்படுகிறது.

நன்கு பயிற்சி பெற்ற நம்பூதிரிகள் அல்லது குருமார்கள் மட்டுமே இந்த பூஜையைச் செய்வார்கள்.

பூஜையின் போது தரையில் அரிசி மாவு மற்றும் மஞ்சள் தூள் கொண்டு அழகான தாமரை மலர் (பத்மம்) வரையப்படும்.



பகவதி சேவை துர்கா தேவியின் நிலையை மேம்படுத்துகிறது. பகவதி தேவி சக்திவாய்ந்த தெய்வங்களில் ஒருவர். மேலும் மிகவும் கருணையுள்ள அன்னை ஆவார். உங்கள் வாழ்க்கையில் எல்லா பிரச்சனைகளுக்கும் காரணமாக இருக்கும் ஒவ்வொரு தீய சக்தியையும் அழிப்பவர் அவரே. பல்வேறு வகையான மாந்திரீகங்களையும் நீக்குவதற்காக பகவதி சேவை பூஜை செய்யப்படுகிறது. மண்டலத்தின் மையத்தில் வைக்கப்படும் ஒரு பெரிய விளக்கைக் கொண்டு இந்தப் பூஜை செய்யப்படுகிறது.

முக்கியத்துவம் மற்றும் நன்மைகள் :

பகவதி சேவா பூஜை என்பது செழிப்பு, வளம், தூய்மை மற்றும் வளமைக்காகப் போற்றப்படும் ராஜராஜேஸ்வரி தேவியைப் போற்றும் ஒரு பழமையான மற்றும் சக்திவாய்ந்த சடங்காகும்.

நம்மைச் சூழ்ந்துள்ள எதிர்மறை ஆற்றல்களின் சூழலைத் தூய்மைப்படுத்தவும், கிரகங்களின் சமநிலையற்ற தாக்கங்களை சரிசெய்யவும், அதன் மூலம் நம் வாழ்வில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் மீட்டெடுக்கவும் இந்தச் சடங்கு செய்யப்படுகிறது.

---

# யார் காலில் விழலாம்

ஒருவர் காலில் சென்று விழும் பொழுது விழுபவரின் கர்மவினையில் ஒரு பகுதி ஆசீர்வாதம் செய்பவரிடம் சென்று சேரும்.

ஆசீர்வாதம் செய்பவர் இறையருள் துணை கொண்டு, கர்ம வினைகளை கழிக்க தெரிந்தவராக இருந்தால் தப்பிப்பார். அதை தவிர்த்து எல்லோரும் தம் காலில் விழ வேண்டும் என்ற ஆணவ மயக்கத்தில் இருந்தால் வினைகளை சேர்த்து நிச்சயம் துன்பப்படுவார். தொப்புள் கொடி உறவாகிய தாய், தந்தையர் காலிலும், கோவில் கொடி மரத்திற்கு கீழும் விழுந்து வணங்குவது மட்டுமே சிறப்பு.



# நாகப்பட்டினம் காயாரோகணர் கோவில் இரட்டை நோக்கு நந்தி

இத்தல அம்பாள் நீலாயதாட்சியின் கண்கள் கருநீலத்தில் அழகானது. நான்கு திருக்கரங்களுடன் நின்ற திருக்கோலத்தில் அம்பாள் காட்சி தருகிறார். 64 சக்தி பீடங்களில் இதுவும் ஒன்றாகும். சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துசுவாமி தீட்சிதர் ஆகியோரின் கீர்த்தனைகளால் அலங்கரிக்கப்பட்டவள் இந்த அன்னை.

இங்குள்ள நீலாயதாட்சி அம்மன் கன்னியாகுமாரி பகவதி அம்மனைப் போலவே கன்னியாக காட்சி தருகிறாள். இங்கு ஆடிப்பூர விழா சிறப்பானதாகும். ஆடிப்பூர விழாவில் கண்ணாடித் தேரில் அம்மன் வீதி உலா வருவாள்.

அம்பாள் சன்னிதி தேர் போல அமைக்கப்பட்டுள்ளது. அம்பாள் இங்கு கன்னியாக இருப்பதால் ஈசன் நந்தியை அவளுக்கு பாதுகாப்பாக அனுப்பினார். ஆனால் நந்தி "தான் அனுதினமும் ஈசனையும் தரிசிக்க வேண்டும்" எனக் கேட்டார்.

உடனே ஈசன், அம்பாள் சன்னிதியில் இருந்து கொண்டே தன்னை வழிபடும்படி கூறினார். இதனால் அம்பாள் எதிரில் உள்ள நந்தி தன் கழுத்தை முழுமையாக திருப்பி, சிவன் சன்னிதியைப் பார்த்தபடி உள்ளது.

நந்தி தனது இடது கண்ணால் ஈசனையும், வலது கண்ணால் அம்பாளையும் பார்த்தபடி இருக்கிறது. இதனை இரட்டை நோக்கு நந்தி என்கிறார்கள்.

இந்த நந்திக்கு அருகம்புல் மாலை அணிவித்து, ஈசன், அம்பிகை, நந்தி என முறைப்படி தேன் அபிஷேகம் செய்து, 5 நெய் தீபங்கள், 4 சந்தனாதி தைல தீபங்கள் ஏற்றி வழிபட்டு வந்தால் கண் சம்பந்தப்பட்ட நோய்கள் அகலும் என்பது நம்பிக்கையாக இருக்கிறது.

குரு சரணம் குரு நாதா சரணம்

# ஆடி அமாவாசை

ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையுள்ள காலம் தான் நம்முடைய முன்னோர்கள் (பித்ருக்கள்) நம்மை பார்ப்பதற்காக இந்த உலகத்திற்கு வருகின்றனர். நம்முடைய பித்ருக்கள் தங்களுடைய பித்ரு லோகத்திலிருந்து புறப்படும் நாளே ஆடி அமாவாசை. அவர்கள் நம் நினைவில் உள்ளதை தெரிவிப்பதற்கும், பூலோகத்திற்கு வரும்படி அழைப்பதற்கும் தான் நாம் ஆடி அமாவாசையன்று அவர்களுக்கு திதி கொடுக்க வேண்டும் என்கிறது சாஸ்திரம். அமாவாசை தினத்தில் நம்மை விட்டுச் சென்ற முன்னோர்களையும், பெற்றோர்களையும் யார் தவறாது வழிபடுகிறார்களோ அவர்களின் பிள்ளைகளுக்கும், தலைமுறைக்கும் ஆசி கிட்டும். அன்று நாம் அளிக்கும் (எள்ளும், தண்ணீரும்) தர்ப்பணம் முன்னோர்களுக்கு அதிக சந்தோஷத்தைத் தரும். தங்களை நினைத்து வழிபடும் சந்ததியினர் வாழ மனமார வாழ்த்துவார்கள் என்பதாலேயே அமாவாசை நாள் பித்ரு தர்ப்பணத்துக்குரிய நாளாக உள்ளது. இந்நாளில் புனித நீர் நிலைகளில் நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதும், அன்னதானம் செய்வதும் புண்ணியத்தைத் தரும்.

இஷ்டி காலம்

நாம் தினமும் பார்த்து வரக்கூடிய நாட்காட்டியில் (காலண்டரில்) பல குறிப்புகளை உணர்த்தக் கூடிய சொற்கள் அமைந்திருக்கும். அதாவது வாஸ்து நாள், திருவோண விரதம், மேல் நோக்கு நாள், கீழ் நோக்கு நாள், சஷ்டி விரதம் என பல குறிப்புகள் இருக்கும். இவற்றினில் ஒன்று இஷ்டி காலம். இன்று அமாவாசை அல்லது பௌர்ணமி திதியாக இருந்தால் நாளை இஷ்டி காலமாக இருக்கும். இஷ்டி என்பது பௌர்ணமி அல்லது அமாவாசை திதியின் இறுதிப் பகுதியும், அடுத்து வரக்கூடிய பிரதமை திதியின் முதல் மூன்று பகுதியும் இணைந்தது தான் இஷ்டி காலமாகும்.



இஷ்டி காலத்தின் சிறப்பு என்னவென்றால் இந்த நேரத்தில் பூஜை செய்யும் போது, பூஜைக்குரிய தேவர்களோ அல்லது தெய்வமோ நம் அருகில் சூட்சமமான ரூபத்தில் வந்து பூஜையை ஏற்றுக் கொள்வார்கள் என ஆன்மீகம் மற்றும் ஜோதிட நூல்களில் குறிப்பு உள்ளது. இந்நாளில் வீட்டு விசேஷம் அல்லது தொழிலுக்கான ஹோமங்கள், யாகங்கள் செய்ய உகந்த நாளாகும். இந் நாளில் நாம் செய்யும் தான, தர்மங்களின் பலன் பிற நாட்களில் கிடைக்கும் பலனை விட பன்மடங்கு அதிகம். "இஷ்டி" என்பதற்கு பூஜை, யாகம் என்று தான் பொருள். "ஓம் இஷ்டி பதயே நமோ நம" என்று குமாரஸ்தவத்தில் முருகப் பெருமானைப் பற்றி குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. இதற்கு பொருள் யாகம், பூஜைகளை விரும்பி ஏற்றுக் கொள்பவர் முருகப் பெருமான் என்பதே ஆகும். இஷ்டி காலத்தில் பூஜைகள், ஹோமங்கள் செய்வது சகல தெய்வங்களின் அருளையும் பெற்றுத் தரும் என்பதால் இந் நாளில் நம்முடைய இஷ்ட தெய்வங்களுக்குரிய பூஜையை முறைப்படி செய்து அவர்களது ஆசிகளை பெற்று இடர்களை களைந்து வளம் பெறுவோம்.

....... ஹேமலதா க்ருஷ்ணகுமார்

# யோகினிகள் உண்மையாகவே கோடி எண்ணிக்கையில் உள்ளனரா?

ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமத்துக்கு ஆதிசங்கரர் உரையெழுதமுயன்றும் அவரால் எழுதமுடியவில்லை. ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமத்துக்கு உரையெழுத நினைத்த ஆதிசங்கரர் தனது சீடர்களில் ஒருவரை அழைத்து ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமம் ஓலைச்சுவடியை எடுத்துவா என்றார்.

அவரும் நூல் அறைக்குள் சென்று ஒரு சுவடியைக் கையில் எடுத்துக்கொண்டு வந்து ஆதிசங்கரரிடம் கொடுத்தார். அதைப் பிரித்துப் பார்த்தார் சங்கரர். ஆனால் அது "விஷ்ணு ஸஹஸ்ரநாமம்" ஏடு. நான் உன்னிடம் லலிதா சஹஸ்ரநாமம் தான் கொண்டு வரச்சொன்னேன் என்றார் சங்கரர். மன்னிக்கணும் என்று சொல்லிவிட்டு அந்த சுவடிக்கட்டை எடுத்துக் கொண்டு சீடர் நூலறைக்குச் சென்று மீண்டும் ஒரு சுவடியைக் கொணர்ந்தார்.

அதுவும் விஷ்ணு ஸஹஸ்ரநாமம்தான். மீண்டும் ஒழுங்காகக் கொண்டுவரச் சொல்லி சங்கரர் சீடரைத் திருப்பி அனுப்பினார். மீண்டும் வந்தது விஷ்ணு ஸஹஸ்ரநாமம்தான்.

ஏன் இப்படிச் செய்கிறாய்? குருவே என் தவறு ஒன்றுமே இல்லை அங்கே ஒரு அற்புதம் நடக்கிறது என்று சீடர் தயங்கி, தயங்கி சொன்னார்.

"நான் என்ன செய்வது? அறையில் இருந்து ஒழுங்காகத்தான் ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமசுவடியை எடுக்கிறேன். ஆனால் அந்த அறைக்குள் ஒரு பெண் நின்றுகொண்டு, என்னைத் தடுத்து, கையில் இருக்கும் சுவடியை வாங்கிக் கொண்டு, "இதைக் கொண்டுபோய்க் கொடு", என்று சொல்லி, இதையே கொடுத்து அனுப்புகிறாள். ஏனோ என்னால் மறுக்கவோ பதில் பேசவோ முடியவேயில்லை என்றார் குழப்பத்துடன்.

உள்ளே இருப்பவள் அம்பிகைதான் என்பதை ஞானதிருஷ்டியால் உணர்ந்த ஆதிசங்கரர் உடனடியாக விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு பாஷ்யத்தை எழுதினார். அம்பிகை ஆதிசங்கரரிடம் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்திற்கு பாஷ்யம் எழுத என்னிடமிருந்து ஒரு குழந்தை இந்த பூமியில் அவதரிப்பான் அவன் என் ஸ்தோத்திரத்திற்கு பாஷ்யம் எழுதட்டும் என கூறினாள். அதன்பிறகு இந்த ஸ்தோத்திரத்திற்கு பாஸ்கரராயர் உரை (பாஸ்யம்) எழுதினார்.

பின்னால் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் பாஸ்கரராயர் ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமத்துக்கு உரை எழுதினார்.

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால் மகாராஷ்டிரத்தில் வாழ்ந்த அவர் கல்வியில் கரை கண்டவர், மாபெரும் சக்தி உபாசகர், வேதங்கள், தந்திர சாஸ்திரங்கள், ஆகம சாஸ்திரங்கள், தர்க்கம், வேதாந்தம், மந்திர சாஸ்திரங்கள் ஆகியவற்றை திறம்பட கற்றவர்.

பல ரகசிய நூல்கள், கோட்பாடுகள், நடைமுறைகள், சம்பிரதாயங்கள், ரகசிய சமயங்கள் போன்றவற்றை நன்கு அறிந்தவர்.

அம்பிகை உபாசனையில் பல கட்டங்களைத் தாண்டியவர். பல அபூர்வ ஆற்றல்கள் படைத்தவர். வரிவஸ்யா ரஹஸ்யம், சேதுபந்தம், ஸௌபாக்ய பாஸ்கரம் ஆகிய அரிய நூல்களை இயற்றியவர். கணேச ஸஹஸ்ரநாமம், ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமம் ஆகியவற்றுக்கு உரையும் விளக்கமும் எழுதியவர். இவற்றில் ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமத்துக்கு அவர் எழுதிய பாஷ்யமே "ஸௌபாக்ய பாஸ்கரம்" என்ற பெயர் பெற்றது. அந்த நாமாவளியில் உள்ள ஆயிரம் நாமங்களுக்கும் அவர் எழுதியுள்ள உரையைப் பத்து அத்தியாயங்களாக ஆக்கியிருக்கிறார்.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் நூறு நாமாக்களின் உரை இருக்கும். இந்த உரை நூலை அவர் காசியில் ஒரு சபையைக் கூட்டி அங்கு அரங்கேற்றம் செய்தார். அந்த அரங்கத்தில் அவர் ஒவ்வொரு நாமத்தையும் சொல்லி அதற்குரிய பொருளையும், பொருள் விளக்கத்தையும் சொல்லிக் கொண்டே வந்தார். கூடியிருந்த அறிஞர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாமும் அவர் பதில் சொல்லிக் கொண்டே வந்தார்.

ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமத்தில் ஒரு நாமா வருகிறது. "மஹாசதுஷ்ஷஷ்டி கோடி யோகினி கண ஸேவிதா" அறுபத்துநான்கு கோடி யோகினி கணத்தாரால் சேவிக்கப்படுகிறவள். அதை விளக்கும்போது ஓர் அறிஞர் அவரைக் கேட்டார். "உண்மையிலேயே அறுபத்து நான்கு கோடி யோகினிகள் இருக்கின்றனரா?" அது உண்மையானால் அவர்களின் பெயர்களைச் சொல்லுங்கள்".

"அப்படியே சொல்கிறேன். நான் சொல்லச் சொல்ல நீங்கள் எழுதிக்கொள்ளுங்கள்". பாஸ்கரராயர் வரிசையாக யோகினிகளின் பெயர்களைச் சொல்லலானார். அவர் சொல்லச் சொல்ல காசிப் பண்டிதர் எழுதிக் கொண்டே வந்தார்.

ஒரு நாள், இரண்டு நாள் ஆகியது. மூன்றாவது நாள் அந்தப் பண்டிதருக்கு சந்தேகம் ஏற்பட்டது. இவர் உண்மையாகவே யோகினிகளின் பெயர்களைச் சொல்கிறாரா? அல்லது மனதுக்குத் தோன்றிய பெயர்களைச் சொல்லி குழப்புகிறாரா? இந்த எண்ணத்தோடு அவர் பாஸ்கரராயரை நன்கு ஏறிட்டுப் பார்த்தார்.

அப்போது ஒரு காட்சி தென்பட்டது. பாஸ்கரராயரின் தோளில் சிறிய உருவில் அமர்ந்து கொண்டு அம்பிகையே வரிசையாகத் தம்முடைய அறுபத்துநான்கு கோடி யோகினிகளின் பெயர்களையும் சொல்லிக் கொண்டிருப்பதைக் கண்டார். அம்பிகை வேறு யார் கண்களுக்கும் தெரியவில்லை.

அவள் சொல்லிக்கொண்டிருந்த பெயர்கள் பாஸ்கர ராயருக்கு மட்டுமே கேட்டன. அவற்றை அப்படியே பாஸ்கரராயர் சொல்லிக்கொண்டிருந்தார். அதைத்தான் காசிப் பண்டிதரும் எழுதிக்கொண்டே வந்திருக்கிறார்.

இதைக் கண்டவுடன் அந்தப் பண்டிதர் பாஸ்கரராயரின் பாதங்களில் விழுந்து வணங்கினார். அதன்பின்னர் அந்த அரங்கேற்றம் தடையில்லாமல் நடந்தேறியது. அந்த அரிய உரையில் பல நுணுக்கமான விஷயங்களைப் பார்க்கலாம். ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமத்தில் ஒரு நாம மந்திரம் இருக்கிறது. "சதுஷ்ஷஷ்டிகலாமயி" அறுபத்து நான்கு கலைகளுக்கும் தாயாக விளங்குபவள் என்று பொருள். இம்மந்திரத்திற்கு விளக்கம் கொடுக்கும் இடத்தில், பாஸ்கரராயர் அறுபத்துநான்கு கலைகளுக்கும் பட்டியலிட்டு அவை என்னென்ன என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.




suswaad

# THE NAME FOR HIGH QUALITY TRADITIONAL SWEETS AND SAVOURIES

3/2, Venkatraman Street,
T. Nagar, Chennai - 600 017.
Ph.: 2815 5558, 2815 2678

## ITEMS AVAILABLE FOR GOKULASHTAMI

**04.09.2026 (FRIDAY)**

**Sales : Subject to availability of stocks only**

| | | | |
|---|---|---|---|
| Vella Cheedai | வெல்லச் சீடை | Nei Appam | நெய் அப்பம் |
| Uppu Cheedai | உப்பு சீடை | Athirasam | அதிரசம் |
| Kai Murukku | கை முறுக்கு | Rava Laadu | ரவா லாடு |
| Thattai | தட்டை | Mixture | மிக்ஸர் |
| Thenkuzhal | தேன்குழல் | Butter | வெண்ணை |
| Maa Laadu | மாலாடு | Aval | அவல் etc., |

**BRANCHES**

10/3, Madhans Apartment, Ground Floor,
South Canal Bank Road, Opp. St. Johns School,
Mandaveli, Chennai - 600 028
Ph.: 2495 0978, Cell: 99406 54138

No.9/A, Kalinga Colony, P. T. Rajan Salai,
K.K. Nagar, Chennai - 600 078
Opp. Shakthi Vinayagar Temple, Near Sivan Park.
Ph.: 2366 2300 Cell : 97899 76111

For online orders : www.suswaad.com

Mylapore
# Ganapathy's ®
Since 1942



## Celebrate
# SRI KRISHNA JAYANTHI
## WITH OUR SPECIAL COMBO PACK!

₹ 750

உப்பு சீடை
**UPPU SEEDAI**
200 gms.

வெல்ல சீடை
**VELLA SEEDAI**
200 gms.

தேன்குழல் முறுக்கு
**THENKUZHAL MURUKKU**
200 gms.

பட்டர் முறுக்கு
**BUTTER MURUKKU**
200 gms.

ரிப்பன் பக்கோடா
**RIBBON PAKKODA**
200 gms.

ஸ்ரீவில்லிபுத்தூர் திரட்டிப்பால்
**SRIVILLIPUTHUR THERATTIPAL**
100 gms.

ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா
**SRIVILLIPUTHUR PALKOVA**
100 gms.

கடலை உருண்டை
**KADALAI URUNDAI**
10 Nos.

பொட்டுக்கடலை உருண்டை
**POTTUKADALAI URUNDAI**
10 Nos.

அச்சு வெல்லம்
**ACHU VELLAM**
100 gms.

அவல்
**AVUL**
100 gms.

பசு வெண்ணெய்
**COW BUTTER**
100 gms.

**MYLAPORE BRANCH**
# 14, Chitrakulam West Street,
(Near P.K.Mahal Kalyana Mandapam)
Mylapore, Chennai - 600 004
Tel : 044-2464 0292, 89390 27272

**WEST MAMBALAM BRANCH**
# 50, Arya Gowda Road,
(Near Shobanaa Kalyana Mandapam)
West Mambalam, Chennai - 600 033
Tel : 044-4856 6363, 89390 36363

**Counter sales from 29th August 2026 onwards**

Get a free Krishnar Padham Sticker with this Combo Pack

Get a free Jute Bag with this Combo Pack

* OFFER VALID TILL STOCKS LAST